# தெபொராளே எழும்பு

தனி சுற்றுக்குமட்டும் ஏப்ரல் 2020

**மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவை களையும் சீஷருக்கு அறிவித்தாள் .யோ. 20 18**



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, பெண்கள் பிரிவு

**கிறிஸ்டி ராஜன்** **9445123103**
**பெண்கள் பிரிவு** christyrajan@fmpb.org

**கிறிஸ்துவில் பிரிய சகோதரிகளுக்கு,**
**இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!**

COVID 19 என்ற கொரானா வைரஸ் தொற்று நோயால் நாமும் நம் குடும்பங்களும், நம் தேசமும் மற்றும் அகில உலகமே பாதிக்கப்பட்டு பயத்தில் உறைந்துபோயுள்ள இந்நாட்களில், தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், **கர்த்தாவே நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன் நான் நம்பியிருக்கிறவர்** என்று நாம் தைரியத்துடன் அறிக்கைச் செய்ய செய்கிறார், நம் ஆண்டவர். சங். 91:2. அதே சமயத்தில் திறப்பில் நிற்கவும் ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

2 நாளா 7:13ல் என் ஜனத்திற்குள் கொள்ளை நோயை அனுப்பும் போது என்று ஆரம்பித்து 14ம் வசனத்தில் ‘ **என் நாமம் தரிபிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு சேஷமத்தை கொடுப்பேன்** என்று வாக்குப்பண்ணியுள்ள இந்த நாட்களில் தேவனுடைய ஜனம் பல இடங்களில் இருந்து ஜெபிப்பதை நாம் காணமுடிகிறது. எனவே நாமும் அதிகமாய் நம்மை தாழத்துவோம்.

ஆண்டவருக்கு பிரியமில்லாத காரியம் நம்மில் இருக்கிறதா? என்று நம்மை சோதித்து, நிதானித்து ஆராய்வோம். ஆண்டவர் நிச்சயம் நமக்கு இரங்கி விடுதலையைக் கட்டளையிடுவார். **‘உன் தேசம் பியுலா என்று சொல்லப்படும். கர்த்தர் உன் மேல் பிரியமாயிருக் கிறார் உன் தேசம் வாழ்க்கைப்படும்’** ஏசாயா 62:4 என்ற இந்த வாக்கும் நிறைவேறும்.

நாம் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேல் நமது இந்திய தேசத்தின் மீட்பிற்காக ஜெபித்து உழைத்து வருகிறோம். தனித்திருக்கும் இந்த நாட்களிலும் நாம் தேவனோடு தனியாக செலவிடும் நேரத்தை அதிகப்படுத்துவோம். ஆண்டவர் பெரிய காரியங்களையும், அதிசயங்களையும் செய்வார்.

**தேவனுடைய பணியில்**
***கிறிஸ்டி ராஜன்***



# உயிர்த்தெழுதல்

ஆண்டவர் தீர்க்காயுசை தருகிறார். ***தாவீது, தீர்க்காயுசும் ஐசுவரியமும் மகிமையுள்ளவனாய் நல்ல முதிர்வயதிலே மரணமடைந்தான்.*** *1நாளா.29:28.* இந்த உலகத்தோடு நம் வாழ்க்கை முடிவதில்லை. மரணத்திற்குப் பின் ஒரு நித்திய வாழ்வு உண்டு என்று தேவம் சொல்லுகிறது. *அன்றியும், ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற படியே...* என்று எபி. 9:27ல் வாசிக்கிறோம். எனவே நியாயத்தீர்ப்பிற்குப் பின் மனிதர்களின் நித்திய வாழ்க்கை தீர்மானிக்கப்படுகிறது. தானியேல் 12:2ல் பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள் என்று வாசிக்கிறோம். இந்த உலகில் பிறந்த அனைவரும் ஒரு நாளில் உயிர்த்தெழுவார்கள். ஆனால் நித்தியத்தை எங்கே செலவழிப்பார்கள்? ஆண்டவரோடு அல்லது ஆண்டவர் இல்லாத இடமாகிய பிசாசோடுதான் கழிக்கவேண்டும். நீங்கள் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பை சந்திக்க ஆயத்தமா*?*

*மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர்; தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.* **நீங்கள் உங்கள் நித்திய வாழ்வை எங்கு செலவழிக்கப் போகிறீர்கள்?**

## 1. உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ விசுவாசத்தின் மைய நம்பிக்கை

உயிர்த்தெழுதலுதல் நம் விசுவாசத்தின் அடிப்படை சத்தியமாகும். உயிர்த்தெழுதல் இல்லாவிடில் நம் விசுவாசம் விருதா. *மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்க வில்லையே.கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா என வேதத்தில் வாசிக்கிறோம் (1கொரி. 15:13,14).* கிறிஸ்து உயிர்த்தெழுந்தபடியால் நாம் பாவமன்னிப்பை பெற்று பரலோக பாக்கியம் பெறுகிறோம்.

நாமும் அவரைப் போல ஒருநாளில் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையைப் பெற்று உள்ளோம். கிறிஸ்து நமக்காக மரித்து உயிர்த்தெழுந்தபடியால், அவரே நமது மீட்பரானார். தேவ சாயலில் படைக்கப்பட்ட மனிதன் நித்தியவாழ்வை உடையவன். பிறப்பு, மரிப்பு, உயிர்ப்பு, நியாயத்தீர்ப்பு என்பவைகள் கடவுளின் நியமனம். இந்த சத்தியம், பிற மதங்களில் இல்லை. இந்த சத்தியம் நமக்கு மறுவாழ்வின் நம்பிக்கையை, ஆறுதலை, தேறுதலைத் தருகிறது.

## 2.உயிர்த்தெழுதல் இயேசுவே ஆண்டவர் என்று வெளிப்படுத்துகிறது.

ரோ.1:5

மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின் படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். அவர் சகல ஜாதிகளை யும், அவர்களுக்குள் இயேசுகிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாகிய உங்களையும்,தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப் பண்ணும்பொருட்டு, எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தை யும் அருளிச்செய்திருக்கிறார். ரோ.1:5-7

கிறிஸ்து மனிதனாக இந்த உலகில் தோன்றினாலும்,அவர் கர்த்தராக ,ஆண்டவராக அனைத்தையும் படைத்தாளுகிறவரவராக இருக்கிறார். என கொலே 1:15-18ல் வாசிக்கிறோம்.

அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக் கப்பட்டது் பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக் குள் நிலைநிற்கிறது. அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி,அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

## 3. இயேசுவின் உயிர்த்தெழுதல் நமது உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்துகிறது 1 கொரி.15:17

பவுல் அப்போஸ்தலன் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை இவ்வாறு நமக்கு உறுதி செய்கிறார்.*1கொரி.15:13-22* மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே.

கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழா விட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக் காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும் நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்.கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களா யிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்க வர்களாயிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து, நித்திரை யடைந்தவர்களில் முதற்பலனானார்.மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப் படுவார்கள்.அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் **கிறிஸ்து.**

## 4.மரணம் இறுதியல்ல மரணத்திற்குப் பின் வாழ்வு உண்டு என்பதை இயேசுவின் உயிர்த்தெழுதல் தெரிவிக்கிறது.1 கொரி 15:20,23

பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப் படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும் அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும் அவர் ஆளுகைசெய்யவேண்டியது.

பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்.. 1 தெச. 4:16-18 ஏனெனில்

**கர்த்தர்**தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார் அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் பின்பு உயிரோடிருக்கும் நாமும் **கர்த்தருக்கு** எதிர்கொண்டு போக மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் **கர்த்தருடனேகூட** இருப்போம் ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.

## 5. இயேசுவின் உயிர்த்தெழுதல் மரணத்தின் மேல் மற்றும் சாத்தானின் மீதும் நமக்கு வெற்றியைத் தருகிறது வெளி.5:5,12:11

உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது் அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும்

தள்ளப்பட்டார்கள்.அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது இரவும் பகலும் நம்முடைய தேவனுக்குமுன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான். மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

## 6.எனவே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் பாக்கியவான்கள்

யார் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்? இயேசுவின் இரத்தத்தினால் தங்கள் பாவங்களர கழுவப்பட்டபின் மரித்தவர்களேயாகும். மறுபிறப்பின் அனுபவத்தைப் பெற்றவர்களுக்கு நித்திய வாழ்வுண்டு. யோ. 3:18-19 உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார்.அவரை விசுவாசிக் கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ள வனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று.

- கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் இளைப்பாறுகிறார்கள.1கொரி 15:14, வெளி 14:13, 7:15,17
- பாடுகளில் இருந்து விடுதலை பெற்றுள்ளார்கள். வெளி 14:13
- தேவனிடமிருந்து வெகுமதியை பெறுவார்கள் வெளி 20:12

நீங்கள் நித்திய நியாயத்தீர்ப்புக்கு தயாரா? வெளி. 22:12
உங்கள் பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளதா?
தேவனை சந்திக்க தயாராகுங்கள், மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துங்கள்.






**வாதை வந்ததற்கு வேதத்தில் பல காரணங்கள் உண்டு. அவைகளில் சிலவற்றை இங்கு காண்போம்.** கொடுக்கப்பட்டுள்ள வசனங்களை வாசியுங்கள்.

- தேவமனிதனுக்கு எதிராக செயல்பட்டதால் வாதை வந்தது.ஆதி.12:17.
- கர்த்தருக்கு செவிகொடாவிடில் வாதை வரும்.லேவி.26:21 2 நாளா.21:14
- அவிசுவாசம் மற்றும் கீழ்படியாமையால் வாதைவரும்.எண்.11:33, 16:46
- கர்த்தருக்கும் ஊழியகாரனுக்கும் விரோதமாக முறுமுறுத்தால் வாதை வரும்.எண். 14:37
- துர்ச்செய்தியை பரப்பினால் வாதை வரும். எண். 14:37
- கர்த்தருடைய பிரமாணஙகளுக்குச் செவிகொடாவிடில் வாதை வரும். உபா. 28: 59,61
- அக்கிரமத்தினால் வாதை உண்டாகும். சங். 89:32
- நம்முடைய கிரியைகளினால் கர்த்தருக்கு கோபம் உண்டாக்கினால் சங். 106:29
- கர்த்தருடைய வசனங்களோடு எதையாவது கூட்டினால் வாதை உண்டாகும்.வெளி. 22:18
- கர்த்தருடைய கோபத்தினால் வாதையை அனுப்புவார். ஏசா.13:8, வெளி.9:20,15:1
- விபச்சாரத்தினால் வாதை உண்டாகும். நீதி.6:33
- கர்த்தருடைய ஜனங்களுக்கு விரோதமாக எழும்புவர்கள் மத்தியில் வாதை உண்டாகும். சகரியா. 14:12
- தேவனாகிய கர்த்தரை ஆராதிக்காதவர்கள் மத்தியில் வாதை உண்டாகும்.சகரியா.14:18
- உலக மக்களுடைய பாவங்களுக்கு உடன்பட்டால் வாதை உண்டாகும். வெளி.18:4

- கர்த்தருடைய ஜனம் தெய்வம் இல்லாதவைகளை ஆராதனை செய்வதால் வாதை உண்டாகும். வெளி.18:4 சங். 106:29
- கர்த்தருடைய நியாயத்தீர்பினால் வாதை உண்டாகும் வெளி.18:8
- உலகத்தில் கர்த்தராகிய இயேசுவைத் தவிர வேறுதெய்வம் இல்லை என்பதை மக்கள் அறியும்படி வாதை வந்தது.யாத்.9:14, 11:1,

## வாதையை எப்படி நிறுத்தலாம்?

- நாம் மனந்திரும்பி, கர்த்தருக்கு முன்பாக நம்மை தாழத்தி, பொல்லாத வழிகளைவிட்டு விலகும்போது நம்முடைய தேசத்திற்கு ஷேமம் உண்டாகும். 2 நாளா. 7:14
- கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் வாதை நிறுத்தப்படும். யாத் 12:13
- போராடி ஜெபிப்பதால் வாதை நிறுத்தப்படும். எண்.16:48
- கர்த்தருக்காக வைராக்கியமாக இருந்து செயல்பட்டால் வாதை நிறுத்தப்படும். எண்.25:8
- நம் பலிபீடம் புதுப்பிக்கப்பட்டு, தேவனோடு நாம் ஒப்புரவாகும்போது வாதை நிறுத்தப்படும். 2சாமு.24:21,25
- கர்த்தருடைய ஆலயத்தில் ஏறெடுக்கப்படும் வேண்டுதலை ஆண்டவர் கேட்டு வாதையை நிறுத்துவார். 1 இராஜா 8:38, 6:29
- கர்த்தரை நோக்கி கெஞ்சுவதினால் வாதை நிற்கும்.சங் 9:10
- கர்த்தரை தாபரமாகக்கொண்டால் வாதை நிறுத்தப்படும்.சங் 91:10
- கர்த்தருக்காக எழுந்து நியாயம் செய்தால் வாதை நிறுத்தப்படும். சங்கீதம் 139:30
- விக்கிரகங்களைவிட்டு கர்த்தரிடம் திரும்பினால் வாதை நிறுத்தப்படும். ஒசியா 13:14

...ஜனத்துக்குள்ளே **கொள்ளை நோயை** அனுப்பும்போது, என் நாமம் தரிக்கப்பட்ட **என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தை தேடி**, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் **திரும்பினால்,** அப்பொழுது பரலோகத்திலிருக்கிற **நான் கேட்டு**, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவரர்கள் தேசத்துக்கு **ஷேமத்தைக் கொடுப்பேன்**. 2 நாளா. 7:14









## கொரோனா சிறப்புக் குறிப்புகள்:



- உலகளவில் இதுவரை 9,10,352 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு, 1,90,901 பேர் குணமடைந்தும், 45,498 பேர் மரித்தும் உள்ளனர். பாதிக்கப்பட்ட வர்களின் வாழ்வில் தேவ வல்லமை வெளிப்பட ஜெபிப்போம்
- தேவ ஜனங்களுக்குள் தனிப்பட்ட பரிசுத்தம், குடும்பமாக, சபையாக ஒப்புரவாகுதல், தாழ்மை காணப்பட பெண்கள் மத்தியிலிருந்து அநேக எஸ்தர்கள், தெபொராக்கள் எழும்ப ஜெபிப்போம்.
- உலகளவில் இதுவரை 9,10,352 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு, 1,90,901 பேர் குணமடைந்தும், 45,498 பேர் மரித்தும் உள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் குணமடைய ஜெபிப்போம்.
- அமெரிக்காவில் 2,03,848 பேர் பாதிக்கப்பட்டு,8,745 பேர் குணமடைந்தும், 4,482 பேர் மரித்தும் உள்ளனர். அமெரிக்க தேசம் ஆதி நாட்களுக்குத் திரும்ப, முழு இருதயத்தோடு தேவனை ஆராதிக்க ஜெபிப்போம்.
- இத்தாலியில் 1,10,574 பேர் பாதிக்கப்பட்டு, 16,847 பேர் குணமடைந்தும், 13,155 மரித்துள்ளனர். பாவங்களிலிருந்து விடுபட,விரைவில் குணமடைய ஜெபிப்போம்.
- ஸ்பெயினில் 1,02,136 பேர் பாதிக்கப்பட்டு, 22,647 பேர் குணமடைந்தும், 9,053 பேர் மரித்தும் உள்ளனர். ஸ்பெயின் இளவரசி மரியம் தெரசா மரித்துள்ளார். தேவகரம் நீட்டப்பட ஜெபிப்போம்
- சீனாவில் 81,554 பேர் பாதிக்கப்பட்டு, 76,238 பேர் குணமடைந்தும், 3,312 பேர் மரித்தும் உள்ளனர். தேவ திட்டம் மாத்திரம் நிறைவேற, உண்மையான மனதுடன் தேவனிடம் திரும்ப ஜெபிப்போம்.
- இந்தியாவில் 1,637 பேர் பாதிக்கப்பட்டு, 148 பேர் குணமடைந்தும், 45 பேர் மரித்துள்ளனர். நமது தேசத்தில் மேலும் பரவாதிருக்கும் கிறிஸ்தவர்கள் மத்தியில் மெய்யான மனந்திரும்புதல் உண்டாக ஜெபிப்போம்.
- தனித்தன்மை வாய்ந்த இஸ்ரவேல் தேசத்தில் சுமார் 2,500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் ஜெபிப்போம்.
- இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன், இளவரசர் சார்லஸ், கனடா பிர-தமரின் மனைவி சோபி, ஸ்பெயின் பிரதமரின் மனைவி பெனோகா..... சாமானிய குடிமக்கள் முதல் தலைவர்கள் வரை அனைவரையும் பாதித்து, கலங்கடித்துக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸை லூக்கா 10:19இன்படி, மேற்கொண்டு, அதிகாரத்துடன் ஜெபிப்போம்.

# படித்ததில் பிடித்தது

‘என்னிடத்தில் **கொண்டுவாருங்கள்**’ என கிறிஸ்து இயேசு பல சந்தர்பங்களில் கூறியதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம். இப்படி அவரது வாக்கின்படி அவரிடம் **கொண்டுவரப்பட்டவர்களும்**,மற்றும் அவருடைய கரங்களில் கொடுக்கப்பட்டவைகளும் அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றதை நாம் காண்கிறோம்.

- சீடர்களால் சுகமாக்கப்படாத சந்திரரோகியான ஒரு வாலிபனை கர்த்தராகிற இயேசுவிடம் **கொண்டு வந்தவுடன்** அவனை அவர் சுகமாக்கினார். முத். 17:17



- திரளான மக்கள் இயேசுவின் போதனைகளை கேட்கும்படிக்கு வனாந்தரமான ஒரிடத்திற்கு வந்திருந்தனர். அவர்களைப் பார்த்து மனதுருகிய ஆண்டவர் அவர்களுக்கு உணவு கொடுக்க கட்டளையிட்டார்.அதற்கு சீடர்கள் எங்களிடத்தில் 5 அப்பமும் 2 மீன்களுமே யல்லாமல், வேறொன்றும் இல்லை என்றனர். இயேசு அவர்களிடம், அவைகளை என்னிடத்தில் **கொண்டு வாருங்கள்** என்றார். மத்.14:13-21

- இராயனுக்கு வரி செலுத்தவேண்டுமா என்ற கேள்விக்குப் பதிலாக இயேசு அவர்களிடம், ஒரு பணத்தை என்னிடத்தில் **கொண்டு வாருங்கள்** என்றார். மத். 12:15. இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் கொடுங்கள் என்று குற்றம் கண்டுபிடிக்க வந்தவர்களுக்கு இயேசு சரியானப் பதிலைக் கொடுத்தார்.

- மக்கள் சிறுபிள்ளைகளை இயேசுவிடம் **கொண்டு வந்தபோது** சீடர்கள் அதை தடுத்தார்கள். இயேசு அவர்களிடம், சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு இடம் கொடுங்கள் என்றார். அவர்களை அவர் ஆசீர்வதித்தார். மாற்கு. 10:14.

- இயேசு சீடர்களில் இரண்டுபேரை நோக்கி, உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்திற்குப் போங்கள்: போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள; அவைகளை அவிழ்த்து **என்னிடத்தில் கொண்டுவாருங்கள்** என்றார். அதனால் அதற்கு இயேசுவை சுமந்து செல்லும் பாக்கியம் கிடைத்தது. மத்.21:2

- இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் காரியம். நாம் நம்மிடம் உள்ள நேரம், தாலந்து, செல்வத்தை இயேசுவிடம் கொண்டு வந்தால் அவர் அவைகளை ஆசீர்வதித்து திரளான மக்கள் ஆசீர்வதிக்கப்பட எடுத்து பயன்படுத்துவார். நமக்கு வரும் பிரச்சனைகள் போராட்டங்களை இயேசுவிடம் எடுத்துச் செல்வோம், அவர் நம்மை விடுவித்து ஆசீர்வதிப்பார்.

திருமதி. மேரி ஜெல்சிங்


10



# பெண்கள் கரிசனைகள்

திருமதி. லதா ஐசக்

**தொறக்காள்:** பெண்கள் கரிசனையில் முதலாவதாக, வேதாகமத்திலுள்ள தொறக்காளைக் குறித்துக் காண்போம் (அப் 9:36 - 43). தொறக்காள் என்ற கிரேக்கப் பெயருக்கு பெண் மான் என்று பொருள். தபீத்தாள் என்ற எபிரெயப் பெயராலும் அழைக்கப்பட்டாள். பிலிப்பு மூலம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டாள். புதிய ஏற்பாட்டில் சீஷி என அழைக் கப்பட்ட பெருமைக்குரியவள் இவள் மாத்திரமே. கிறிஸ்துவோடுகூட நெருங்கின தொடர்பு உடையவளாக, அவருக்காக பாடுபடவும், மரிக்கவும் ஆயத்தமுள்ளவளாக இருந்தாள் எனத் தெரிகிறது.

- ***இயேசுகிறிஸ்துவின் சீஷி என்று அழைக்கப்பட நாம், அவருக்காக பாடுபட, மரிக்க ஆயத்தமாயிருக்கிறோமா?***

தன் வாழ்நாளில் தன்னால் இயன்ற அநேக நற்கிரியைகளைச் செய்து வந்தாள். தனது தையல் திறமையைப் பயன்படுத்தி, ஏழைகள், விதவைகளுக்கு வஸ்திரங்களையும், அங்கிகளையும் தைத்துக் கொடுத்து உதவினாள். அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறருக்குள்ள வைகளையும் நோக்குவானாக (பிலி 2:4) என்ற வசனத்தின்படி, தொறக்காள் பிறர் நலனில் அக்கறை உள்ளவளாக வாழ்ந்தாள்.

- ***நாமும் பிறர் நலனுக்காக அக்கறை கொள்ள, நன்மை செய்ய, தானதர்மம் பண்ண ஆயத்தமா?***

தொறக்காள் திடீரென்று வியாதிப்பட்டு மரணமடைந்தது, அவளது அன்பினால் கவரப்பட்ட, பயனடைந்த விதவைகளுக்கு தாங்கொண்ணா துயரமாயிருந்தது. கைவிடப்பட்ட நிலையை அடைந்தனர். வார்த்தை பேசுவதைவிட வாழ்க்கையே அதிகம் பேசும் என்பதற்கு தொறக்காளின் வாழ்க்கை ஒரு சிறந்த உதாரணம்.

- ***நம் வாழ்விற்குப்பின்னரும் நமது நற்கிரியைகள் வெளிப்படுமா என்று சிந்தித்துப் பார்ப்போம்.***

பேதுரு வந்து தபீத்தாளே எழுந்திரு என்று சொல்ல அவள் உயிர் பெற்றாள். அப்போஸ்தலரால் செய்யப்பட்ட முதல் உயிர்த்தெழுதல். தொறக்காளின் உயிர்த்தெழுதலின் மூலம் யோப்பா பட்டணத்தார் அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அல்லேலூயா





11

## பெண்கள் சாதனைகள்

பெண்கள் தன்னம்பிக்கை, தளராத உழைப்பு, துணிவு, வீரம் ஆகிய வற்றின் அடையாளங்களாக விளங்கி, வியத்தகு சாதனைகளை நிறை வேற்றி வருகிறார்கள். நாம் வசிக்கும் நாட்டில் மற்றும் பிற நாடுகளில் அநேக சாதனைகளைப் படைத்து வரும் ஒருசில பெண்களைக் குறித்துக் காண்போம்.



**செல்லம்மாள்:**அதிக எடை கொண்ட பொருட்களை ஏற்றிச்செல்லும் கனரக வாகனமான லாரியை ஓட்டுவது கடினமானது. அந்த கடினமான காரியத்தையும் எளிதாக செய்து கொண்டிருக்கிறார் 29 வயதான செல்லம்மாள். இவர் திருச்சி மண்ணச்சநல்லூரை அடுத்த பச்சைவெளி கிராமத்தைச் சேர்ந்தவர். லாரி டிரைவரான தனது கணவரிடம் பயிற்சி பெற்று, லாரி, கார் ஓட்டிஅசத்தி வருகிறார்.



**கண்ணகி**: பெண்கள் சுடுகாட்டை எட்டிப்பார்க்கவே தயங்கிக் கொண்டிருக்கும் நிலையில், தகனமேடையில் துணிச்சலாக பணியாற்றி வருகிறார், திருவண்ணாமலை கண்ணகி. ஆண்களால் மட்டுமே செய்யப்பட்ட இதனை, பெண்களும் முடியும் என்று நிருபித்து, திருவண்ணாமலை ஈசான்ய மைதானத் திலுள்ள எரிவாயு தகன மேடையில் பொறுப்பாளராக இருக்கும் இவர் பி.ஏ பட்டதாரி. இதுவரை 2,000க்கும் மேற்பட்ட உடல்களை எரித்தும், 1,500க்கும் மேற்பட்ட உடல்களை அடக்கம் செய்துமிருக்கிறார். இவரது சேவையைப் பாராட்டி, தமிழக அரசு அவ்வையார் விருது வழங்கியுள்ளது.



**உமாதேவி:** 73 வயதாகும் இவர் தினமும் 4 கி.மீ தூரம் நடந்து, நூலகத்திலிருந்து புத்தகங்களை எடுத்துக் கொண்டு, வீடு வீடாக சென்று, புத்தகங்களை விநியோகம் செய்து, புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி வருகிறார். இவரது முயற்சியால் 200க்கும் மேற்பட்ட வீடுகளில் புத்தகங்களை வாங்கி வாசித்து வருகிறார்கள். இணையதள யுகத்திலும் புதுமையைச் செய்து அறிவை சுமக்கும் பெண்மணியான உமாதேவி, கேரளா, புதன்னூர் கிராமத்தைச் சேர்ந்தவர்.



**கலைவாணி:** சென்னை, தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் குத்துச்சண்டைப் பிரிவில் இந்தியாவுக்குத் தங்கம் பெற்றுத் தந்து சாதனை படைத்திருக்கிறார் கலைவாணி...

**யாஸ்மின்:** சராசரி பெண்களை தலைநிமிர்ந்து வாழ வைக்கும் குடும்பப்பெண்ணான இவர் (25 வயது), ஏழைப்பெண்கள், விதவைகள், திருநங்கைகளை ஆட்டோ ஓட்டுநர்களாகவும், தொழில் முனைவோர் களாகவும் உருவாக்கி, மாதம் 25,000 வருமானம் ஈட்டுமளவு உயர்த்தியுள்ளார்.

**கரோலின் மால்ட்சாம்டுலாங்கி:**மிசோராமைச் சேர்ந்த 11 வயதே சிறுமி, கடத்தப்பட்ட ஒரு சிறுபிள்ளையைக் காப்பாற்றி, அதற்கான வீரமங்கை விருதைப் பெற்றிருக்கிறார். மாத்திரமல்ல,' கிடைத்த பரிசுத்தொகையில் பாதிக்கப்பட்ட பிள்ளைக்குக் கொடுத்து, அன்பை வெளிப்படுத்தி இருக்கிறார்.



**நாவோகோ இமோடோ** (Naoko Imoto): ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற முதல் ஜப்பானிய இளம் வீராங்கனை. மூன்று வயதில் நீச்சல் பயிற்சியைத் துவங்கி, 10வது வயதில் முந்திய சாதனையை முறியடித்தவர். தற்போது UNICEF-ல் உலகளாவிய சிறுவர் நலனுக்காக பாடுபட்டு வருகிறார்.



**சீமா வர்மா:** மும்பையை மாரத்தானவீராங்கனையான இவர் பலமுறை வெற்றி மேடை ஏறியிருக்கிறார். வாழ்க்கையில் நேரிட்ட சோதனைகளைத் தாண்டி, வெற்றிப்படி ஏறியிருக்கிறார். 17 வயதில் திருமணம் முடித்து, குடிகாரக் கணவனின் சித்ரவதையால் அவ்வாழ்க்கை நான்கு ஆண்டுகளில் முடிவுற்று, ஒரே மகனுடன் சிறு வேலை-களைச் செய்து, பின்பு மாரத்தானில் பங்கேற்று, இன்று அநேக சாதனைகளைப் படைத்துள்ளார்.



**டாரதி கிரோபுட்:** மூலக்கூறு ஆய்வில் முதன்மை பெண்மணி. ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் வேதியியல் துறையில் இணைந்து படித்து, **இன்சுலின்** பென்சிலின் மூலக்கூறு கட்டமைப்பை கண்டுபிடித்தவர். அறிவியல் துறையில் நோபல் பரிசு பெற்ற முதல் இங்கிலாந்து பெண்.

**பக்தி சர்மா:** ஆர்க்டிக் கடலில் 1.8 கி.மீ தூரத்தை 33 நிமிடத்திலும், அண்டார்க்டிக் கடலில் 1.4 மைல் (2-3 கி.மீ) தூரத்தை 41.14 நிமி டத்திலும் கடந்து புதிய சாதனை புரிந்த இளம் வீராங்கனை

**அருணிமா சின்ஹா**: ரயில் விபத்தில் காலை இழந்த இவர் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார். உலகிலுள்ள ஐந்து உயர்ந்த மலை களை ஏறி முடித்த, காலை இழந்த முதல் பெண் என்ற உலக சாதனையையும் படைத்துள்ளார்.

என்ன பெண்களே, இவர்கள் அனைவரும் நம்மைப் போன்ற பெண்களே. பெண்களாகிய நம்மால் முடியாதது என்பது எதுவுமில்லை. சோதனைகளை சாதனைகளாக்குபவர்கள் பெண்களே. உங்கள் வாழ்வில் சந்திக்கும் சோதனை-களையும், நாம் ஆராதிக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் உதவியுடன், உங்கள் முயற்சியுடன் சாதனைகளாக்கி வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறிச்செல்ல வாழ்த்துக்கள்!!

# ஜெபக்கரிசனைகள்

சென்னை, பூந்தமல்லி பகுதியில் போதையிலிருந்த கட்டிடத்தொழிலாளி யான சுரேஷ் செல்போனில் ஆபாசப்படம் பார்த்துக்கொண்டே, கழிவறைக்கு வந்த 10 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து, சிறுமிக்கு மூச்சு திணறி யதால், பயந்து மாடியிலிருந்து கீழே தள்ளியதில், சிறுமி மரணம்......

- சிறு பிள்ளைகளுக்கு எதிரான செயல்களைச் செய்பவர்கள் உடனடியாக தண்டிக்கப்பட.....இதற்குக் காரணமான போதைப்பழக்கம், செல்போன் மோகத்திலிருந்து மக்கள் விடுபட

- கடந்த 2019ம் ஆண்டு மட்டும் இந்தியர்கள் டிக்டாக்கில் 550 கோடி மணி நேரத்தை வீணடித்துள்ளதாக பேஸ்புக் நிறுவனம் அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளது. ஜனங்களின் நேரத்தையும் ஒழுக்கத்தையும் பரிசுத்தத்தையும் கெடுக்கிற இந்த செயலி முற்றிலும் தடை செய்யப்படவும் இந்த அடிமைத்தனத்திலிருந்து ஜனங்கள் விடுதலை அடைய ஜெபிப்போம்.

- நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களில் 94% பேர் மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உள்ளனர். கற்பிக்கிற ஆசிரியர்களே மனஅழுத்ததினால் இருந்தால் பிள்ளைகளின் கல்வி நிலைமை சீர்கெடும்.மனஅழுத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர் ஆசிரியைகள் அப்பிணியிலிருந்து விடுதலை அடைந்து சுகமடைய ஜெபிப்போம்.

- பண்ருட்டியில் திருமணமான எட்டு மாதத்தில், 3 மாத கர்ப்பிணியான மனைவி கணவரின் குடிப்பழக்கத்தால் தற்கொலை செய்து கொண்டார். போதை தெளிந்த கணவர் இதைக் கண்டு, தானும் தற்கொலை செய்து கொண்டார்.

- பெருகிவரும் மதுபான அருந்துபவர்களால் தமிழகத்தில் 35-40 வயதுக்குட்பட்ட இளம் விதவைகள் அதிகரித்து வருகின்றனர். அநேக உயிர்களைக் குடித்துக் கொண்டிருக்கும் குடிப்பழக்கம் மறைய, இதற்கு அடிமைப்பட்டி ருப்போர் விடுதலை பெற, மதுபானக்கடைகள் மூடப்பட ஜெபிப்போம்.

- வயதான பெற்றோர்களை கவனிக்காத பிள்ளைகள் இப்போது அதிகரித்து வருகின்றனர். கேரளாவில் கடந்த 4 வருடங்களில் மாத்திரம் 15650 வழக்குகள் பதிவாகி உள்ளது. பெற்றோர் தங்களது வீட்டில் இருப்பது ஆசீர்வாதம் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வயதானவர்களுக்கு விரோதமாக செயல்படும் குற்ற செயல்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

- பல்கேரியாவில் குடும்பத்திலுள்ள ஆண்களினால் வீட்டிலுள்ள 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் விற்கப்படுகின்றனர். பெண்கள் விற்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள கொடிய செயல் மறைய ஜெபிப்போம்.

CHILDREN'S MINISTRIES

# சிறுவர் பிரிவு

**Mrs. Mary Daniel**



என்னுடைய பெயர் **கிப்ட்சன் சாம்ஜெபராஜ்.** என்னுடைய பெற்றோரின் ஜெபத்தைக்கேட்டு ஆண்டவர் அவர்களுக்கு கொடுத்த பரிசாக நான் இருந்தபடியால், எனக்கு என் பெற்றோர் கிப்ட்சன் என பெயரிட்டனர். சிறு வயதிலிருந்தே கர்த்தரை அறிகிற அறிவில் வளரவும், கிறிஸ்துவின் வழியில் நடக்கவும் என் பெற்றோர் எனக்கு பேருதவியாக இருந்தனர். தேவனுடைய அளவற்றக் கிருபைஎன்னோடு இருந்த படியால் கல்வியிலும், திருச்சபையின் ஓய்வு நாள் பாடசாலையிலும் சிறந்த மாணவனாக இருக்க முடிந்தது. தேவன் எனக்குக் கொடுத்த தாலந்துகளால் நான் அநேக பரிசுகளை பள்ளியிலும், ஆலயத்திலும் பெற முடிந்தது.

என்னுடைய வாலிப நாட்களில உலக காரியங்களின் இழுப்பினால் பின் மாற்ற வாழ்விற்குத் தள்ளப்பட்டேன். ஜெபத்தில் தளர்ச்சி, வேத வாசிப்பில் நாட்டமின்மை, தேவனோடு செலவிடும் நேரமும் குறைந்து உலகத்தை மட்டும் அதிகமாக நேசிக்க ஆரம்பித்தேன். தன்நலத்திற்காகவே அதிக நேரம்செலவழித்தேன். விளையாடுவதிலும், மற்றும் பொழுதுபோக்கிற்காக வலைதளங்களில் என்னுடைய நாட்டம் இருந்தபடியால் சிறுது சிறுதாக கர்த்தரைவிட்டுத் தூரம் சென்றுவிட்டேன். இதனால் சிறுவயதில் எனக்கு இருந்த சந்தோஷம், சமாதானம் என்னைவிட்டு அகன்றது. தேவனைப் பிரியப்படுத்திய நான் இந்த வாலிப வயதில் என்னையும் உலகத்தையும் பிரியப்படுத்துகிறவனாக, கிறிஸ்து அற்றவனாக மாறிவிட்டேன்.

இப்படிப்பட்ட நாட்களில் என் நண்பர் ஜோஸ்வா என்னை சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய அடிக்கடி அழைப்பான். அவனுடைய அன்பான அழைப்பிற்கு பல சாக்கு போக்குகளை சொல்லி நான் செல்லாமல் நாட்களை கடத்தி வந்தேன். ஒரு நாள் என்னை டேனிஷ்பேட்டையில் நடக்கும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மாநிலமுகாமிற்கு அழைத்தான். நான் வருகிறேன் என அவனிடம் சொல்லிவிட்டேன். அந்த முகாமில் என்னைப் போன்ற அநேக வாலிபர்கள் தங்களைத்தேவனுக்கு அர்பணித்து சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்வதைக் கண்டு. நானும் என்னை அப்படிப்பட்ட ஊழியத்திற்கு என்னை அர்பணித்தேன். அந்த முகாம் என்னுடைய வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை எற்படுத்தி இழந்து போன சந்தோஷத்தைப் பெற்றுக் கொண்டேன்.பின்பு நான் பொறியல்கல்லுரியில் சேர்ந்து படித்து ஒரு நல்ல வேலையில் சேர்ந்தேன். கிடைக்கும் நேரங்கயில் தன்னார்வமாக சிறுவர் ஊழியம் மற்றும் ஜெபக்குழுவிலும் பங்கு பெற்று கிறிஸ்துவில் வளர்ந்து வந்தேன். பின்பு நான் பொறியல் கல்லுரியில் சேர்ந்து படித்து ஒரு நல்ல வேலையில் சேர்ந்தேன்.கிடைக்கும் நேரங்களில் தன்னார்வமாக சிறுவர் ஊழியம் மற்றும் ஜெபக்குழுவிலும் பங்கு பெற்று கிறிஸ்துவில் வளர்ந்து வந்தேன்.

புதிய வேலையும் கிடைத்தது தேவன் என்னை அதிகமாக ஆசீர்வதித்தார். இந்நாட்களில் என்னுடைய தந்தை அதிக வியாதிப்பட்டார்கள். அவர்களின் சுகவீனத்தைக் கண்ட நான் நிலைகுலைந்து போனேன். ஆனாலும் தேவனளங்கள் ஜெபத்தைக் கேட்டு நல்ல சுகத்தைக் தந்தார். இவ்வாறு என்னை ஆசீர்வதித்த தேவனுக்காகவே வாழத் தீர்மானித்து சிறுவர் ஊழியத்தில் இன்னும் அதிகமாக பங்கேற்றேன். நான் இவ்விதமாக தேவனுடைய பணியில் ஈடுபட்டதால் ஆண்டவர் மென்மேலும் எங்களை ஆசீர்வதித்தார். ஏன்னுடைய திருமணமும் பெற்றோர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது, ஜெபித்துக்கொள்ளுங்கள்.

நம் தேசத்தில் வாழும் மக்களும் பல்லாயிர சிறுவர்களும் கர்த்தராகிய இயேசுவை அறியவேண்டும் என்பதே என் விருப்பம். அதற்காக ஜெபித்து உழைத்து வருகிறேன். நீங்களும் உங்கள் நேரத்தை, தாலந்தை தேவனுக்காக கொடுங்கள் நாம் இணைந்து பணியாற்றும் போது இந்த தேசம் தேவனை அறிந்து கொள்ளும்.



**தன்னார்வ பணியாளர்கள் பயிற்சி முகாம், சென்னை**

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

மாநில முகாம், மே 21முதல் 24 வரை

சிறுவர்,சிறுமிகளே, மாநில முகாமின் வேத வசனப் போட்டிகளுக்கு உங்களை ஆயத்தப்படுத்துங்கள்.

**<u>மனப்பாட வசனம்</u>**

- LKG to 2nd Std - சங்கீதம் 99 வசனங்கள் 1-9
- 3rd Std to V Std - சங்கீதம் 99, 100
- VI Std to VII Std - சங்கீதம் 99, 103

மேலும் விபரங்களுக்கு சிறுவர் பிரிவை கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, பெண்கள் பிரிவு,**

*29, உயர்நிலைப் பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை 600053 .044-26570404*